**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**<u>IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | SC.No.134/2025 | |
| Prosecution Witness: | | PW-4/LW-8 | |
| Name: | திரு. புண்ணியகோடி | Taluk: | திருவிடைமருதூர் |
| S/o. | திரு. தர்மலிங்கம் | Age: | 50 |
| Occupation: | சிறப்பு உதவி ஆய்வாளர் | Village: | அணைக்கரை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>01.08.2026 By Thiru.Anbumani, Translator</u>**

(எதிரி முன்னிலையானார்.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது ஆண்டமடம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு **10.10.2023**ம் தேதி காலை **11.00** மணியளவில் குவாகம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது அரசால் தடைசெய்யப்பட்ட போதை மற்றும் குட்கா பொருட்கள் சம்பந்தமாக எனக்கு கிடைக்கப்பட்ட தகவலின்படி அசாவீரன்குடிக்காடு பகுதியில் மு.நி.கா இளவரசன் மற்றொரு மு.நி.கா கலைவாணன் ஆகியோருடன் கண்காணிப்பில் இருந்தபோது

அசாவீரன்குடிக்காடு கிராமத்தில் பெட்டிக்கடை வைத்திருந்த தேவேந்திரன் என்பவர் விற்பனை செய்த அரசால் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் போதை பொருளை பழமலை என்பவர் வாங்கிக்கொண்டு சென்றபோது அவரை விசாரித்தபோது மேற்படி தேவேந்திரன் கடையில் அந்த ஹான்ஸ் பாக்கெட்டை வாங்கியதாக சொன்னார். அதன்பிறகு அந்த கடையில் சென்று பார்த்தபோது கடையில் 7 பாக்கெட் ஹான்ஸ் இருந்தது அதனை கைப்பற்றினோம். அதன்பிறகு அந்த ஹான்ஸ் பாக்கெட்டுகளுடன் எதிரியையும் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து கைப்பற்றப்பட்ட பொருளுக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பொறுத்து தயார் செய்யபட்ட படிவம் 91 அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அதன்பிறகு பொதுமக்கள் யாரும் சாட்சிச்சொல்ல முன் வராததால், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்த என் உடன் வந்த காவலர்கள் இளவரசன், கலைவாணன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் ஏழுமலை என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு இந்த வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இந்த அசல் முதல் தகவல் அறிக்கையை மகஜருடன் இணைத்து மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் செந்துறை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை காவல் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு மேல் விசாரணைக்கு ஒரு நகலையும் வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இந்த வழக்கின் 2 வது விசாரணை அதிகாரியான

காவல் ஆய்வாளர் அவர்களுடன் பணிபுரிந்தவர் என்ற முறையில் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அவர் விசாரித்த இவ்வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் மணிவண்ணன் அவர்கள் 11.10.2024 ம் தேதியன்று வழக்கில் கைப்பற்றிய ஹான்ஸ் பாக்கெட்டை இரசாயன பகுப்பாய்வு செய்யவேண்டி நீதிமன்ற ஆணைப்பெற்று தலைமைக்காவலர் ராகவன் அவர்கள் மூலம் திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்பிறகு மேற்படி தலைமைக்காவலர் ராகவன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 31.12.2024 ம் தேதியன்று இந்த வழக்கின் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை பெற்று வந்த உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பின்னர் இந்த இரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** பின்னர் 11.02.2025 ம் தேதியன்று அந்த ஹான்ஸ் பாக்கெட்டை பொறுத்து அதனால் ஏற்படும் பாதிப்புகளை குறித்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் அவர்களிடம் விசாரணை செய்து கருத்துரை பெற்றுள்ளார். **அந்த கருத்துரை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** அன்றைய தினமே இந்த வழக்கினை பதிவு செய்த என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் தனது விசாரணையை முடித்து எதிரிமீது சட்டப்பிரிவுகள் 272, 273, 328 of IPC r/w 59 of FSSA Act and 7(5) of COTPA Act 2003 and 77 of Juvenile Justice Act 2015 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொதுவாக இது போன்ற வழக்குகளை சுகாதாரத்துறையும், உணவு பாதுக்காப்பு துறையும் கடையை ஆய்வு செய்து புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கில் புகார்தாரரும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் நான்தான் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் தகவலின் வகையில் **Suo Moto** என்று போட்டுள்ளோம் என்றால் சரிதான். எந்த வகையில் **suo Moto** என்று போட்டேன் என்றால் நானே வழக்கினை பதிவு செய்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனக்கு இரகசிய தகவல் எதன்மூலமாக வந்தது என்றால் நான் அந்த பக்கம் போகும்போது ஒருவர் சொன்னார். நான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை இருந்தேன் என்றால் காலையில் 10.30 வரை இருந்தேன். அன்றாடம் பணிகளை குறித்து காவல் நிலை பொது நாட்குறிப்பேட்டில் குறித்து வைப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த பொது நாட்குறிப்பின் அசலையோ, நகலையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. நானும் அன்றாடம் செல்லும் பணிக்குறித்து தனியாக ஒரு குறிப்பேடு வைத்திருப்பேன் என்றால் சரிதான், அந்த குறிப்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் எல்லாம் வெளியில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான், எல்லா கடைகளிலும் கிடைக்காது. நான் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை ஆஜர் எதிரி தயாரிக்கவில்லை என்றால் சரிதான். குவாகம் காவல் நிலையத்தில் இருந்து எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் மூவரும் தனித்தனியாக அவரவர்

வாகனத்தில் சென்றோம். நான் கைப்பற்றப்பட்ட சொல்லப்படும் கடைக்கு அருகில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான், அதில் எப்போதும் 10, 20 பேர்கள் அமர்ந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் பொருட்களை கைப்பற்றியபோது பொதுமக்களை சாட்சியாக அழைத்தும் வரவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் யார்யாரிடம் கேட்டோம் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றும், அப்படி கைப்பற்றியிருந்தால் அங்குள்ள பொதுமக்கள் யாரைவது சாட்சியாக சேர்த்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. நான் அன்றையதினம் மட்டும் 4 கடைகளில் இதுபோன்ற வழக்குகள் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த 4 வழக்குகளில் நான் எத்தனை வழக்குகளுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் 2 வழக்கிற்கு பதிவு செய்துள்ளேன். அதன்பிறகு காவல் நிலைய எல்லையில் வேறு கிராமத்திலும் இதுபோன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அன்றைய தினம் அரியலூர் மாவட்டம் முழுவதும் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இதுபோன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை முழுக்க முழுக்க மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் இரசாயன ஆய்விற்கு அனுப்பிய பொருட்கள் அனைத்து எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டவை இல்லை என்றும், நாங்களாக வாங்கி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினோம் என்றால் சரியல்ல. நான் தவறுதலாக புள்ளியியல் கணக்கிற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால், அதனை ஒட்டி காவல் ஆய்வாளர்

அவர்களுக்கு வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சான்று பொருட்களை இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல, செந்துறை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டோம். இந்த வழக்கில் பொது மக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் முன் வராததால் சேர்க்கவில்லை.

**மறு விசாரணை**

இல்லை.

**ஒப்பம்.மணிமேகலை,L.L.M.,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**அரியலூர்,**